## பென்னி குக் பேத்திக்கு கண்ணீர் அஞ்சலி!




தமிழ்நாட்டின் தென்பகுதி மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் விவசாயத்திற்கும், குடிநீர்த் தேவைகளுக்கும் உதவும் முல்லை–பெரியாறு அணையைக் கட்டி, அம்மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியவர் ஆங்கிலேயப் பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுக். ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாளை, தேனி பகுதி மக்கள் பொங்கல் வைத்துக் கொண்டாடி, நன்றியுடன் நினைவுகூர்கின்றனர்.

கர்னல் பென்னி குக்கின் மகன்வழிப் பேத்தி ஆல்பா மெக்கனெல் கடந்த 18–ஆம் தேதியன்று மறைந்தார். இந்தத் தகவல் அறிந்து, தேனி மாவட்டம், சின்னமனூரில் “தண்ணீர் தந்தவர் பேத்திக்கு கண்ணீர் காணிக்கை” என பொதுமக்கள் பேனர் வைத்து அஞ்சலி தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டு மக்கள் செய்நன்றி மறவாதவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்வு இருக்கிறது என சமூக வலைதளங்களில், ‘அஞ்சலி பேனரை’பலரும் பகிர்ந்து வருகின்றனர். முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் இதுதான் தமிழர் வாழ்வியல் என

அந்த பேனரைப் பகிர்ந்து,

**‘உதவி வரைத்தன் றுதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து’.**

என்கிற குறளையும், அதற்கு கலைஞரின் விளக்கத்தையும் பகிர்ந்துள்ளார்.

‘உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொருத்து சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்’ என கலைஞர் அந்தக் குறளுக்கு விளக்கம் அளித்துள்ளார். தேனி மக்கள் அந்தக் குறளுக்கு அர்த்தம் சேர்க்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்




பெ.லோகநாதன்

### உள்ளாட்சித் தேர்தல் வாழ்த்து!

1986-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கழகம் பெருவெற்றி பெற்றது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், திருவாதூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான் தேர்வானேன். அதைத் தொடர்ந்து, ஊராட்சி ஒன்றியத் தலைவர் போட்டியில், லத்தூர் ஒன்றியத் தலைவராக சுந்தரமூர்த்தி (நடுவில் நிற்பவர்) வெற்றிபெற்றார். அதையடுத்து தலைவர், பேராசிரியரைச் சந்திக்க மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் அழைத்து வந்தார். அன்றைய தலைமைச் செயலகக் கட்டடத்தில் இருந்த கழக அலுவலகத்தில் தலைவரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம்!

**– பெ.லோகநாதன், ஒன்றிய அவைத் தலைவர், லத்தூர் வடக்கு ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரின் கார் ‘ஜப்தி’!

1953-ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தின்போது, கைது செய்யப்பட்ட கலைஞருக்கு ஐந்து மாத கடுங்காவல் தண்டனையும் 35 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத் தவறினால், ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டு இருந்தது. கலைஞர் 115-வது நாளாக சிறையில் இருந்தபோது, அபராதத் தொகை செலுத்தவில்லை என கலைஞரின் காரை ‘ஜப்தி’ செய்தது நீதிமன்றம். அபராதத் தொகையை ஒருவர் செலுத்தி, காரை மீட்டார் என நம்நாடு பத்திரிகை பதிவு செய்தது.

# சீரணி ⟶ இளைஞர் அணி

21

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

சீரணி, தமிழ்நாட்டின் தலைநகரிலிருந்து கடைக்கோடி கிராமம் வரை செம்மையான பல பணிகளை மேற்கொண்டு வந்தபோது, அந்த அமைப்புக்கு எட்டுத் திக்கிலிருந்தும் பாராட்டுகள் வந்து குவிந்தன. அவற்றில் இரண்டு முக்கியப் பாராட்டுகள் இவை...

1970–ஆம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் சென்னைக்கு வந்திருந்தார் பஞ்சாப் மாநிலத்தின் அன்றைய முதல்வர் குர்ணாம் சிங். அவரை சென்னை விமான நிலையத்தில் மா.முத்துசாமி, முரசொலி மாறன், வை.பாலசுந்தரம் உள்ளிட்ட தி.மு.க. தலைவர்கள் வரவேற்றனர்.

அப்போது பத்திரிகைகளிடையே பேசிய குர்ணாம் சிங், “அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட ‘சீரணி’ பற்றி இன்று சில விவரங்களைப் படித்தேன். சீரணியை உருவாக்குவது என்று அண்ணா எடுத்த முடிவு, அற்புதமானதொரு யோசனை ஆகும். அது மிகப்பெரும் செயல்” என்றார்.


அடுத்து, பீஜித் தீவு அரசாங்கத்தின் உதவி தலைமைச் சமுதாய வளர்ச்சி அதிகாரி சி.எஸ்.பிள்ளை என்பவர், 1970–ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் சென்னைக்கு வந்து இருந்தார். அப்போது சீரணி அமைப்பின் செயல்பாடுகள் சிலவற்றைப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதைக் குறித்து அவரது எண்ணங்களை ஓர் அறிக்கையாகத் தந்திருந்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

**“சென்னை மாநகரில் சீரணியினர் ஆற்றிவரும் பணி ஒன்றினைக் கண்ணுறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதைப் பெரும் பேறாகவே நான் கருதுகிறேன்.**

“சென்னை மாநகரில் சீரணியினர் ஆற்றிவரும் பணி ஒன்றினைக் கண்ணுறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதைப் பெரும் பேறாகவே நான் கருதுகிறேன். இந்த அரிய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர், தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் தலைவி திருமதி வெங்கடாசலம் ஆவார். என்னுடைய பல அவசர அலுவல்களுக்கிடையேயும் சீரணியினர், சென்னையில் கட்டி வருகின்ற பல்வேறு கட்டடப் பணிகளை நேரில் சென்று பார்த்தேன். நெருப்புக்கும் வெள்ளத்திற்கும் அஞ்சி வாழ்ந்த மக்களுக்குப் பாதுகாப்பான உறையுள் கட்டித்தரும் திருப்பணி அது.

சீரணியை நடத்திச் செல்பவர்களின் தொண்டுள்ளத்தையும், உற்சாக உணர்வினையும், முயற்சிகளையும் பறைசாற்றி நிற்கின்றன. எனக்கு இந்தப் பணியினைச் சுற்றிக் காண்பித்தார், சீரணித் தனி அதிகாரி திரு.பரமசாமி அவர்கள். மிகவும் செயல் வேகம் படைத்தவராக அவர் தென்படுகிறார். தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்குச் செயல் வடிவம்

## சீரணிக்குப் பாராட்டு...
## பஞ்சாப் முதல் பீஜித் தீவு வரை!


ஓவியம் : ரவி பேலட்

கொடுப்பதில் வேகமான ஒரு சக்தியாக அவர் சுற்றுகிறார்.

சீரணியின் தொண்டு பல்கிப் பெருக என இதயப்பூர்வமான நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தமிழக சீரணி அமைச்சர் என்.வி.நடராசன் அவர்கள், சீரணி குறித்து விவரித்தார்.

இத்தகைய சாதனைகளைக் கண்டு மைய அரசு அமைச்சர்கள், தமிழக அரசு மேதகு ஆளுநர், சர்வோதயத் தலைவர், மொரீசியஸ், பீஜித் தீவு அமைச்சர்கள், வேறு பல அமைப்புகளின் பொறுப்பாளர்கள் சார்பாக எங்களின் பாராட்டுதல்களை தமிழக முதல்வர் கலைஞருக்குத் தெரிவித்து நலம் வாழவும் வளரவும் வேண்டினார்கள்”.

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

21

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

***தி.மு.க.வை இந்துக்கள் விரோதி என்று ஒரு தரப்பும், தமிழர் விரோதி என்று இன்னொரு தரப்பும் சொல்லி வந்த நிலையில், தலித் விரோதி என்றும் கட்டமைக்க முயற்சிக்கிறார்களே?***

திராவிட அரசியல் பேரியக்கமான தி.மு. கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே ‘ஒன்றே குலம்-ஒருவனே தேவன்’ என்ற திருமூலரின் வாக்கிற்கிணங்க சமத்துவக் கொள்கையைக் கடைப்பிடித்து, அனைத்து சமயத்தினரின் உரிமைகளுக்கும் மதிப்பளித்த இயக்கமாகும். தமிழ் மொழி காத்திட, தங்கள் உயிரை ஈந்தவர்கள், தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்து, தனிமைச் சிறைக் கண்ட தலைவர் என தி.மு.கவுக்குத் தியாக வரலாறு உண்டு. அனைத்து மக்களுக்கான சமூக நலத் திட்டங்களை சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் செயல்படுத்தும் தி.மு.க.வின் திராவிட மாடல் அரசைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களும், திராவிட சித்தாந்தம் நிலைப் பெற்றிருக்கக்கூடிய தமிழ்நாட்டு மண்ணில் அரசியல் களத்தில் வெற்றி பெற முடியாதவர்களும் தி.மு.க.வை இந்து விரோதி, தமிழர் விரோதி என்று பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டு, கடைவிரித்தேன்... கொள்வாரில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**தொல்.திருமாவளவனும் பெரியார்–அம்பேத்கர் தத்துவங்கள் வழியில், மதவாத சக்திகளுக்கு எதிராக நின்று, திராவிட இயக்கக் கொள்கைளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.**

## சாதிச் சார்பற்ற நாடு காண்போம்!



முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய சமூக நீதிப் பாதையில் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, பட்டியல் இன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களையும் மிகுந்த முனைப்புடன் நிறைவேற்றி வருகிறது. அதனால், பட்டியல் இன மக்களிடம் கழகத் தலைவருக்கு செல்வாக்கு அதிகரித்துள்ளது. தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இணைந்துள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் அதன் தலைவர் தொல். திருமாவளவனும் பெரியார்-அம்பேத்கர் தத்துவங்கள் வழியில், மதவாத சக்திகளுக்கு எதிராக நின்று, திராவிட இயக்கக் கொள்கைளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இது, பா.ஜ.க.வை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கும் சக்திகளுக்குப் பொறுக்கவில்லை. திருமாவளவன் அவர்களின் செல்வாக்கைச் சிதைக்கும் நோக்கத்துடன் தி.மு.க. மீது பாய்கிறார்கள்.


“கல்வியில் வேலைவாய்ப்பில் எங்களுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை, ஆகவே எங்களுக்கு சில உரிமைகள் வேண்டும், எனவே இந்தச் சாதியைச் சொல்லிக் கேட்கிறோம் என்று ஒரு அடையாளத்திற்காகத்தான் சாதி என்று சொல்லப்படவேண்டுமேயல்லாமல், நாங்கள் தனித்துத்தான் வாழ்வோம், தனியாகத்தான் இருப்போம் என்பதற்கு அல்ல சாதிகள். எனவே, மதச்சார்பற்ற நாடு தேவை என்பதைப்போல, சாதிச் சார்பற்ற நாடும் தேவை என்பதை நாம் மறந்துவிடாமல் பாடுபட வேண்டும்” என்று கூறியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவர் வழியில் நடைபோடும் அரசு, நான்கு கால் பாய்ச்சலால் எட்டமுடியாத உயரத்தில் சூரியன் போல ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

**...வினா தொடரும்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

550

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.